

Vol.22 | No. 7 | July 2018

The Official Organ of the Diocese of Thuckalay

# இறையருள்

## Feast of St. Thomas the Apostle





Priests to Tirunelveli Mission- 13.06.2018



Sisters to Madurai Mission - 02.06.2018



World Environment Day - KKSSS

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
Volume 22 No : 7 July 2018

# இறையருள்
# IRAIARUL



## உள்ளே...

| | |
|---|---|
| Bishop's Message | 02 |
| பேராயர் சுற்றுமடல் | 06 |
| மறைக்கல்வி | 11 |
| சிறுமலர் இயக்கம் | 13 |
| வின்சென்ட் தே பவுல் | 15 |
| இளையோர் இயக்கம் | 16 |
| சமூக சேவை சங்கம் | 21 |
| Birthdays and Feastdays | 22 |
| அருட்சகோதரர்களிடமிருந்து... | 23 |
| மறைவட்டச் செய்திகள் | 24 |
| செங்கோட்டை செய்திகள் | 27 |
| Bishop's Engagements | 28 |

## Editorial Board

*Patron*
**His Excellency**
**Mar George Rajendran SDB**
*Chief Editor*
**Fr. Joseph Santhosh**
*Executive Editor*
**Mr. Soundara Raj**
*Associate Editors*
**Fr. Thomas Sathianesan**
**Mr. Edwinson**
**Mr. Berlin Athencod**

Published by:
**Fr. Joseph Santhosh**
**Bishop's House**
**Post Box No . 12**
**Thuckalay - 629 175**
**K.K.Dist,Tamil Nadu,India.**
Designed by:
**Berlin Athencod**
Printed at
**Pulari Offset Press**
**Thuckalay**
**Ph:04651-252570**

Bishop George Rajendran SDB
*Diocese of Thuckalay*

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

Ref. No. Priests/GR/83/2018 28 June 2018

Dears,

The month of July is an important month for us in our Syro-Malabar Church. On 3 July, we keep the solemnity of St Thomas and on 28 July we celebrate the feast of St Alphonsa. In this circular, I want to briefly reflect with the spirituality of St Alphonsa, who is the first Saint from our Church. We have a Shrine dedicated to her at Nagercoil and it attracts large number devotees during her feast. Her spirituality lies in her relationship to Jesus Christ and her experience of His presence in her daily life. She was a person who loved and invited loving suffering. She is called the 'Little Flower' of India. As a Franciscan Clarist nun, her life was confined within the four walls of the FCC Convent at Bharananganam. Her life is also a tale of docility to God, to her fellow sisters, to her spiritual master, to her relatives and to the children around in the school. Although confined externally, it is this child like docility, which helped others feel and discover the mystery of the grace of sanctity at work in her. The funeral sermon that her Spiritual Director Rev. Fr Romulus preached is the first instance when her hidden sanctity was revealed. Among other things, he said: "With the most profound conviction in my heart and as one who has known this religious very intimately, I affirm that we are now participating in the last rites of a saintly person. If the world had realized her intrinsic worth, unprecedented crowds including hundreds of priests and bishops from all over India would have assembled here. They would have rushed and clamoured for even a glimpse of this body and for some precious relic or token of this person. I assure you, that as far as human judgment can be relied on, this young nun was not much less saintly than the Little Flower of Lisieux."

Annakutty was the childhood name of Alphonsa. Her childhood name not only reveals her childhood goodness, virtues and trials, but also an often unsung story and history of the family values, faith practices and ecclesial foundations of the Christians in Kerala. Annakutty was born on 19 August 1910. Her mother died three months after birth and on her deathbed she entrusted Annakutty to the care of

her own sister Annamma Muricken. With her aunt, Annakutty painfully and joyfully tried to overcome the inexplicable loss of her mother and motherly love. Her father unwillingly placed the child with her newly found mother with the sole motive of promoting an ideal upbringing, which would make Annakutty more capable as a future housewife. Annamma Muricken was a stern disciplinarian and Annakutty was brought up in a strict environment. The family played a key role in her faith formation and love for Christ, especially through the prevalent practices of regular evening prayers, observance of weekly fasting and participation in the Eucharistic celebration.

Fr Romulus rightly emphasized in his funeral sermon the role that the family had played in the life of Alphonsa in nurturing and deepening her Christian faith. However, the most important fact is that Annakutty developed a personal devotion and love for Christ. This is the fruit of her genuine faith formation. It is also the first visible sign that faith was a lived experience in her childhood. Jesus Christ began to become a concrete personal relational reality for her. It is because of this relational realization of God's love and knowledge of Jesus Christ that Annakutty began to yearn for sanctity. The desire for sanctity was for Alphonsa a concrete response to the invitation of Christ. The surprising depth of spiritual understanding that Alphonsa possessed in her childhood teaches us the most profound lesson on the Christian life. Spirituality and sanctity are not mere objects to yearn for but they come as a result of a personal experience with Jesus Christ in the Church and in the Sacraments. In fact, she wrote: "I loved God more ardently. I took great care to avoid all faults. I had nothing special to mention in my First Confession. I zealously aspired to become a saint. I felt that desire while I was reading the biography of St Therese of Lisieux."

The decisive upbringing of Annakutty in a devout Christian family paved the way to the fruit borne in her life as a professed Clarist nun at Bharananganam. During her convent days, she accepted and loved suffering and pain. She wanted to take part in the suffering of Jesus. She understood the important role that suffering play in the process of sanctification. Suffering that is accepted and offered is a rare spiritual height for the Christian soul than a passive fatalistic resignation to one's problems or pain. As the Catechism of the Catholic Church teaches, "...the sufferings to be endured can mean that in my flesh I

complete what is lacking in Christ's afflictions for the sake of his Body, that is, the Church...Suffering...becomes a participation in the saving work of Jesus."

The writings of Alphonsa point to the redemptive value of that suffering have. She wrote: "Since only grief and suffering have fallen to the lot of my Spouse, I too lovingly embrace them, and my soul is at peace, though my body continues to be tormented. For the last seven years I have ceased to be my own, being given over entirely to my Divine Spouse. You know all that; and now let the Lord do as He will with me. It is not a cure I am anxious for, but only that His Holy Will be fulfilled in me." Thus, behind the suffering, Alphonsa cheerfully accepted the truth of a living and loving encounter with Jesus Christ. She denied herself. She died to herself. She eschewed everything imaginable of a personal sense of ownership or belonging. In this self-emptying, she gained everything in Jesus Christ. She became a person living in Christ so that all her sufferings and pain are not thought to be experienced apart from Christ but in Christ and with Christ.

The Church fully understood the spirituality of suffering that St Alphonsa practised in her life. During the beatification ceremony, St John Paul II said: "From early in her life, Sister Alphonsa experienced great suffering. With the passing of the years, the heavenly Father gave her an ever-fuller share in the Passion of his beloved Son. We recall how she experienced not only physical pain of great intensity, but also the spiritual suffering of being misunderstood and misjudged by others.... She came to love suffering because she loved the suffering Christ. She learned to love the Cross through her love of the crucified Lord."


The central message that comes from the life and the writings of Alphonsa is this: only a living experience of Christ can lead us to a loving appreciation of his suffering for us and a meaningful acceptance and offering of our sufferings to the Lord in love. Because the suffering accepted with the crucified Lord is saving and redeeming. One of the prayers that she composed reveals this great truth. She wrote: "Lord Jesus, hide me in the wound of your sacred heart. Free me from my desire to be loved and esteemed. Guard me from my evil attempts to win fame and honour. Make me humble till I become a small spark in the flame of love in your Sacred Heart. Grant me the grace to forget all worldly things and myself. Jesus, sweet beyond words, convert all worldly consolations into bitterness for me. O my Jesus, Sun of

Justice, enlighten my intellect and mind with your sacred rays. Purify my heart, consume me with burning love for you, and make me one with you.”

As we are going to celebrate the feast of this great saint from own land, let us learn the redemptive value that suffering has in own lives and live our lives as St Alphonsa did. Let us ask her to intercede for us that we may live our Christian and Priestly lives after the model of the Crucified Saviour, whose heart was pierced for our sake.

**CONCLUSION**

As you receive this circular letter, you will be busy preparing to celebrate the feast of St Thomas, the Apostle of India. While we take pride in calling ourselves St Thomas Christians, it is important that we know him well and make every effort to emulate at least some of the virtues that he excelled in. St Thomas refused to believe in the resurrection of Jesus without having a direct personal experience. When he had that experience, we find him to be a true believer: “My Lord and My God!” Like St Thomas, we too need a personal encounter with the Lord so that our lives will become more enriching and our ministry more effective. May St Thomas intercede for each one of us so that we too can experience the risen Lord as he did!



+George Rajendran SDB

Bishop of Thuckalay

| வரவிருக்கும் நிகழ்வுகள் | |
|---|---|
| ஜூலை 03 | திருத்தொண்டர் அருட்பொழிவு - கிறிஸ்துராஜபுரம் |
| ஜூலை 07 | மஞ்சாலுமூடு ஆலய அரங்கம் மந்திரிப்பு மற்றும் இரவு விழிப்பு செபம் |
| ஜூலை 08 | மறைக்கல்வி ஆண்டுவிழா |
| ஜூலை 10 | அருட்தந்தையர்கள் கூட்டம் |
| ஜூலை 14 | கர்தினால் சந்திப்பு-சங்கமம் |
| ஜூலை 15 | முழுக்கோடு ஆலய அர்ச்சிப்பு, கர்தினாலுடன் கூட்டம் |
| ஜூலை16-17 | தமிழக ஆயர் பேரவை கூடுகை-பூண்டி |
| ஜூலை 20 | தூய அல்போன்சா திருத்தல திருவிழா ஆரம்பம் |
| ஜூலை 21 | தூய அல்போன்சா திருத்தலம் நோக்கி நடைபயணம் |
| ஜூலை 29 | மறைமாவட்ட திருத்தல திருவிழா கொண்டாட்டம் |

# உயர் பேராயர் சுற்றுமடல்
## சபை நாள் சுற்றுமடல்

Prot. No. 0918/2018

சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயரான கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி தனது உடன் பணியாளர்களான பேராயர்களுக்கும், ஆயர்களுக்கும், குருக்களுக்கும், துறவறத்தாருக்கும் மற்றும் அனைத்து இறைமக்களுக்கும் எழுதுவது, ஆண்டவரின் அருள் உங்களோடு இருப்பதாக!

ஈசோவில் அன்புக்குரியவர்களே,

புனித தோமையாரின் 'துக்ரான' திருநாளையொட்டி உங்களுக்கு சுற்றுமடல் எழுதுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். இவ்வேளையில் மூன்று முக்கியமான சிந்தனைகளை நமது சிந்தனைக்கும், செபத்திற்கும் பொருள் ஆக்குகிறேன்.

**1. மறைபரப்பு பணியில் கவனம்**

முதலாவதாக, மறைத்தொண்டு பணிக்கு நமது கவனம் திரும்ப வேண்டும். நமது சீரோமலபார் திருச்சபைக்கு, இந்தியா முழுவதும் நற்செய்தி பணி ஆற்றிடவும் மறைத்தொண்டுபணி செய்வதற்குமான முழு அங்கீகாரத்தை உரோமை தலைமைப்பீடம் கடந்த 2017 அக்டோபர் 9 தேதி அளித்துள்ளது. அதன் பிறகு வருகின்ற முதல் துக்ரானா திருவிழா இதுவே. மறைத்தொண்டு பணி என்பது இயேசுவை நமது வார்த்தையாலும் செயல்களாலும் வாழ்க்கையாலும் உலகிற்கு கொடுப்பதாகும். மறைத்தொண்டு பணிகளை விட மறைத்தொண்டு வாழ்க்கையே முக்கியமானது. திருமுழுக்கு வழியாக ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் கிடைக்கின்ற இறை அழைப்பே திருத்தொண்டுப்பணி.

ஆகவே ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை வழியாக இயேசுவுக்கு சான்று பகர வேண்டும். இந்த அழைப்பை செயலாக்கம் செய்ய ஒவ்வொருவரும் வெவ்வேறான வாழ்க்கை சூழல்களை கையாளுதல் அவசியம். குடும்ப வாழ்க்கை வாழ்வோர் பொதுநிலை யினராகவும், தனித்து வாழ்வோர் துறவறத்தார், ஆயர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் ஆகியோர் தங்களின் வாழ்க்கை முறைகளுக்கு ஏற்றவாறு திருத்தொண்டுப்பணி செய்ய கடமைப் பட்டுள்ளனர். அனைவருடையவும் இலக்கு ஒன்றே, அது தங்களின் அழைப்புக்கு ஏற்றவாறு விசுவாச மற்றும் ஆன்மீக வாழ்க்கை வாழ்தல் ஆகும். இந்த இலக்கை நிறைவேற்றுவதில் அனைத்து கிறிஸ்தவகளுக்கும் சமமான கடமை உண்டு. அவ்வாறே, மறைபரப்பு பணியின்

முறைகளில் வேறுபாடு உண்டு என்பதும் உண்மை. இயேசு தனது திருச்சபை வரவிருக்கும் நிகழ்வுகள் தொடர்ந்து நடத்துகின்ற மறைபரப்புப் பணியின் ஊடகங்களே நாம் ஒவ்வொருவரும். ஒவ்வொரு தனித்திருச்சபையின் விசுவாச சமூகம் வாயிலாக ஈசோவின் இப்பணி தொடர்கிறது. ஆகவே, அனைவரும் இந்த ஒரே இலட்சியத்தை தனதாக்க முற்படும் போது மட்டுமே இயேசுவின் பணி இவ்வுலகில் நிறைவு பெறுகிறது. அன்பு மற்றும் இரக்கம் ஆகியவற்றையே நமது மறைத்தொண்டு பணியின் மூலக்கூற்றுகளாக எடுக்க வேண்டும். ஒருவர் மீது மற்றவர் அதிகாரம் செலுத்துவதைவிட, ஒருவருக்கொருவர் பணிவிடை புரிந்து வாழ்தல் வேண்டும். ஒருவர் மற்றவருடைய பணிகளுக்கு உடன் நின்று, அவருடைய செயல்களில் உதவிசெய்து வாழ அனைவருக்கும் கடமையுண்டு. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தனது தவக்கால சிந்தனையில் இவ்வாறு கூறியிருந்தார். "ஈசோ மெசியாவின் உறுப்பினர்களாகிய நாம் நமது சொல்லிலும், செயலிலும் அவரது நற்செய்தியையும் வாழ்க்கைச் சான்றையும் பிறருக்கு பகிர்ந்தளிக்கிறோம் எனும் நோக்கில், எல்லா கிறிஸ்தவர்களும் இறைவாக்கினர்களே"

**2. குடும்ப மறைப்பணியில் கவனம்**

இரண்டாவது, நமது கவனம் செல்ல வேண்டியது குடும்ப மறைப்பணியில் ஆகும். பிள்ளை களுக்கு விசுவாச வாழ்க்கை பயிற்சியும், கிறிஸ்தவ சான்று வாழ்வும் கிடைக்கின்றதா என்பதைப் பற்றிய உயரிய ஒரு சிந்தனை நம் அனைவருக்கும் இருக்க வேண்டும். பெற்றோர்கள், விசுவாச பயிற்சியாளர்கள், மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர்கள், பங்கு அருட்பணியாளர்கள், ஆயர்கள் ஆகிய அனைவரும் ஒரே முறையில் செயல்படுத்த வேண்டிய கடமையே விசுவாசப்பயிற்சி. உலகளாவிய சவால்களை கிறிஸ்தவ வாழ்க்கை முறைக்கு ஏற்றவாறு நன்னெறியில் மேற்கொள்ள பிள்ளைகளின் திறனை வளர்க்க வேண்டும். அதோடு இன்றைய இணைய யுகத்தில் ஊடகங்களின் பயன்பாடு. குறிப்பாக இணையதளம் மற்றும் அது சார்ந்தவைகளை முறையாக கையாளத் தகுந்த அறிவுரைகளை அவர்களுக்கு நாம் கட்டாயம் கொடுக்க வேண்டும்.

திருமணம் என்னும் திருவருட்சாதனம் குடும்ப வாழ்வின் அடிப்படையாகும். 'கடவுள் தரும் பிள்ளைகளை மகிழ்வுடன் ஏற்று அவர்களை தூய்மையின் பாதையில் வளர்க்க ஆண்டவர் உங்களை வல்லவராக்குவாராக' என்ற திருமண வழிபாட்டுச் சடங்கின்

இறுதி செபம் நம்மை அதிகமாக சிந்திக்க வைக்கட்டும். திருத்தந்தை சில நாட்களுக்கு முன்பு வெளியிட்ட "மகிழ்ந்து கொண்டாடுங்கள்" என்னும் அப்போஸ்தலிக்க சுற்றுமடலில் விசுவாச வாழ்வை புனித வாழ்வாக சித்தரிக்கின்றார். புனித வாழ்வே கிறிஸ்தவ வாழ்வின் இலட்சியம், அன்பு வாழ்வின் முழுமையும் அதுவே ஆகும். திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்கள் 2011 ஏப்ரல் 13ம் தேதி வெளி யிட்ட செய்தியில் "புனிதம் என்பது அன்பு வாழ்க்கை வாழ்வதன் முழுமை" என கூறுகின்றார். ஒவ்வொருவருக்கும் அவர்களது வாழ்க்கை முறைகளுக்கு ஏற்றவாறு தூய்மையில் வாழ முடியும் ("மகிழ்ந்து கொண்டாடுங்கள்" No: 21). விவசாயம், மீன்பிடித்தல், கால்நடை வளர்ப்பு, வணிகம், அரசியல், அரசாட்சி, சமூக சேவை, கலை, இலக்கியம், ஊடகம், இயற்கைப் பராமாரிப்பு என வாழ்வின் பல்வேறு துறைகளில் பணிபுரிவோர், இறையன்பை முன்நிறுத்தி தனது மற்றும் பிறரின் நன்மைக்காக செயல்படும்போது புனிதத்தில் வளர்கின்றனர். உண்மை, நீதி, அன்பு, இரக்கம், தயவு, மன்னிப்பு, பொறுமை, தியாகம் போன்ற தூய ஆவியின் கொடைகள், நமக்கு அனைத்திலும் வல்லமை அருளட்டும்.

வாழ்வின் நெறிகளை ஒவ்வொருவரும் மிகுந்த ஆர்வமுடன் கற்கவும், கற்பிக்கவும் வேண்டும். வயது முதிர்ந்தவர்களோடுள்ள மதிப்பும், அவர்களுக்கு கொடுக்க வேண்டிய பாதுகாப்பும் கிறிஸ்தவ வாழ்வின் மதிப்பீடுகளாக நாம் அனைவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். கருச்சிதைவும், கருணைக் கொலையும் வாழ்வின் மதிப்பீடுகளுக்கு எதிரான செயல்கள் ஆகும். இந்த விழிப்புணர்வு மனித மனங்களில் உருவெடுக்க வேண்டும். பிள்ளைகள் வளர்ந்து திருமணத்திற்கு ஆயத்தம் பெறும் வேளையில் நல்ல குடும்ப வாழ்வு வாழ தேவையான தகுந்த பயிற்சியும் ஆயத்தமும் கொடுத்தல் வேண்டும்.

2018 அக்டோபர் மாதம் நடக்கவிருக்கும் ஆயர் கூடுகை (Synod) இளையோரைப் பற்றியாகும். இளையோர் மறைபரப்புப்பணியில் புத்துயிர் பெறவும் காலமாற்றங்கள் சரியாகவும் இந்த இளையோருக்கான கூடுகை (Youth Synod) பயன்தரும் என்று நாம் எதிர்பார்ப்போம். இளையோருக்கான மறைபரப்புபணிகள் நமது மறைமாவட்டங்களிலும், மறைத்தொண்டு தளங்களிலும் ஏராளம் நடைபெறுகின்றன. இருப்பினும் மாறுபடும் காலச்சூழல்களைப் புரிந்து கொண்டு விசுவாச வாழ்விலும், நன்னெறிகளிலும் இளையோரை வளரச் செய்ய உதவும்

பொருட்டு பயிற்சிகளையும், செயல்பாடுகளையும் நாம் இன்னும் புதுப்பித்து வழங்க வேண்டும்.

**3. கிறிஸ்தவ விசுவாசத்தின் சரியான நிலைப்பாடு**

மூன்றாவதாக, கிறிஸ்தவ விசுவாசத்தின் முறையான நிலைப்பாட்டை குறித்து உங்கள் கவனத்திற்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன். ஆண்டவரின் அருள் அதாவது ஆண்டவரின் செயலே ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் நிகழ வேண்டும். தூய ஆவியின் குரலுக்கு செவிமடுப்பவனே உண்மையான கிறிஸ்தவன். புனித பவுல் அடியார் கொரிந்தியருக்கு எழுதிய திருமுகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார். “நான் பறைச்சாற்றிய செய்தி ஞானத்தின் கவர்ச்சியான சொற்களில் அமையவில்லை. ஆனால் அது தூய ஆவியின் வல்லமையை எடுத்துக் காட்டுவதாக அமைந்தது, உங்கள் நம்பிக்கைக்கு அடிப்படை மனித ஞானம் அல்ல. கடவுளின் வல்லமையே” (1 கொரி 2: 45). இவ்வாறான கிறிஸ்தவ நிலைப்பாட்டை மாற்றிவிட்டு இந்நவீன உலகில் நம்மில் பலரும் தங்களது வாழ்வின் வெற்றியை மட்டும் விரும்புகின்ற ஒரு வாழ்க்கை முறையை வளர்ந்து வருகின்றனர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் “மகிழ்ந்து கொண்டாடுங்கள்” என்னும் சுற்றுமடலில் விவரித்துள்ளார். முதல் நூற்றாண்டிலிருந்தே திருச்சபைத் தந்தையர்கள் இந்த நிலைப்பாடுகளுக்கு பதில் அளித்துள்ளனர். இந்த தன்னல கோட்பாடுகளுக்கு திருச்சபையின் நடவடிக்கைகளை படிப்பினைகளையும் நாம் நன்கு புரிந்து கொள்ளுதல் அவசியம். அத்தோடு, அதை செயல் படுத்தவும் வேண்டும். நமது அறிவின் செயல்களால் மட்டும் விசுவாசத்தின் எல்லா மறை உண்மைகளையும் புரிந்து கொள்ளலாம் என நினைப்பது விசுவாசத்தின் தன்மைக்கு சேராத ஒன்றாகும். இவ்வாறு செய்வோர் இறை உண்மைகளை விசுவாசத் திலிருந்து வேறுபடுத்துகின்றனர். இதன் மூலம் இவர்கள் கிறிஸ்து இல்லாத ஒரு இறைவனுக்கும், திருச்சபையில்லாத ஒரு கிறிஸ்துவிற்கும், இறைமக்கள் இல்லாத ஒரு திருச்சபைக்கும்; முக்கியத்துவம் கொடுக்கின்றனர் என திருத்தந்தை பிரான்சிஸ் கூறுகிறார் (மகிழ்ந்து கொண்டாடுங்கள் No:37)

அண்மையில் நடந்த ஓகி (Ockhi), நிப்பா (nipah) அழிவுகளையும் அதன் தாக்கங்களையும் எதிர்கொள்ள சபை மக்கள் ஒன்றிணைந்து செய்த எல்லா செயல்களையும் நன்றியுடன் நினைக்கின்றேன். குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் எதிராக சமூகத்தில் நடக்கின்ற கொடுமைகளுக்கு எதிராக விழிப்புணர்வு

உடையவர்களாக நாம் மாற வேண்டும். இவர்கள், மற்றும் சமூகத்தில் தாழ்த்தப்பட்டோர் ஆகியோரின் பாதுகாப்பும் நம் ஒவ்வொருவரின் கடமையாகும். பிளாஸ்டிக் பொருட்கள் வழியாக ஏற்படும் தீங்குகளைப் பற்றி நாம் விழிப்புள்ளவர்கள் ஆக வேண்டும். அதை அழிக்கவும் நாம் முயற்சிப்போம். விவசாயம் செய்யவும், தரிசு நிலங்களை பண்படுத்தி மரங்கள் நடவும் பங்குகளில் முயற்சிகள் எடுக்க வேண்டும். ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நாம் முயற்சிகள் செய்ய வேண்டும். இவ்வாறு கிறிஸ்தவ அன்பினுடையவும், இரக்கத்தினுடையவும், இணைப்பாளர்களாக கிறிஸ்துவுக்கு சான்று பகர நாம் முயலுவோம்.

நமது சபையில் புலம் பெயர்ந்தவர்களுக்காக் சிறப்பாக வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கு செபிப்பதற்காக நான் அழைப்பு விடுக்கிறேன்.

வழியும், உண்மையும், வாழ்வுமான ஈசோ மெசியாவை பாரத மக்களுக்கு கொடையாக ஈந்த மார் தோமையாரின் மார்க்கம் அதன் எளிமையிலும், முழுமையிலும் நமது வாழ்வில் ஒளியூட்டம் பெற 'துக்றான' திருநாளும் அதன் கொண்டாட்டங்களும் நமக்கு உதவட்டும். "என் ஆண்டவரே என் கடவுளே" எனும் புனித தோமையாருடைய விசுவாச அறிக்கை நமது வாழ்விலும் சான்றாகட்டும்.

**அனைவருக்கும் துக்றான திருநாள் வாழ்த்துக்கள் !!!**

**கர்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி**
**சீரோ மலபார் திருச்சபையின் உயர் பேராயர்**

---

காக்கனாடு மவுண்ட் புனித தோமையார் உயர் பேராயர் தலைமையகத்தில் இருந்து 2018 ஜூன் 13 ம் தேதி வழங்கப்பட்டது.

உயர் பேராயாரின் இச்சுற்றுமடல் 2018 ஜூலை 1 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அனைத்து பங்குகளிலும் திருப்பலியிடையே வாசிக்க வேண்டும்.

ஜூலை 3 அன்று எடுக்கப்படுகின்ற காணிக்கை சீரோமலபார் திருச்சபையின் மறைபரப்புப் பணிகளுக்காக பயன்படுத்தப்படும். எனவே, அருட்தந்தையர்கள் இதனை இறைமக்களுக்கு நினைவுபடுத்த வேண்டும் என்றும் இக்காணிக்கையை காலதாமதமின்றி மறைமாவட்ட பொருளாளாரிடம் ஒப்படைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

---



# CATECHISM மறைக்கல்வி

"என் பிள்ளையே, என் வார்த்தைகளை மனதில் இருத்து, என் கட்டளைகளை செல்வமென போற்று. என் கட்டளைகளை கடைப்பிடி நீ வாழ்வடைவாய், என் அறிவுரைகளை உன் கண்மணி போல் காத்துக்கொள்வாய்" (நீமொ 7:12)

அனைவருக்கும் அன்பின் நல்வாழ்த்துக்கள்!

**தலைமையாசிரியர்களின் கூடுகை**

நமது மறைக்கல்வி தலைமை யாசிரியர்களின் கூடுகை ஜூன் 2 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இயக்குநர் அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல் அவர்களின் தலைமையில் மறைக்கல்வி அலுவலகத்தில் வைத்து தூய ஆவி பாடலுடன் ஆரம்பமானது. மறைக்கல்வியின் இயக்குநராக பணியாற்றிய அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்களும், மறைக்கல்வியின் உதவி இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை ஷோஜி புத்தன் புரைக்கல் அவர்களும் உடனிருந்தனர். தலைமையாசிரியர் திரு. சோனிக் அவர்கள் புதிய இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல் அவர்களையும், அருட்தந்தை அலக்ஸ் புத்தேட் அவர்களையும் உதவி இயக்குநர் அருட்தந்தை ஷோஜி புத்தன் புரைக்கல் அவர்களையும் வாழ்த்தி வரவேற்று உரை நிகழ்த்தினார்.

**வாழ்த்துரை**

அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்களுக்கு அருட்தந்தை சனில் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்கள் மறைக்கல்வி இயக்குநராக பணிபுரிந்த போது ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறினார். இக்கூடுகையின் போது இந்த வருடம் மறைக்கல்வி ஆண்டுவிழாவானது ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படக் கூடிய வகையில் வகுப்புகள் மற்றும் திருப்பலி நடைபெறும். ஒவ்வொரு மறைக்கல்வி நிலையமும் ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமை காணிக்கை எடுத்து Catechetical Fund க்காக மறைக்கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும் இயக்குநர் தந்தை அவர்கள் கூறினார். பின்னர் ஆண்டுவிழா கலைநிகழ்ச்சிகள் ஒவ்வொரு மறைக்கல்வி நிலையங்களுக்கும் வழங்கப்பட்டது. மேலும் மறைக்கல்வி மாணவர்களுக்கு Bag ஒவ்வொரு பங்கிற்கும் தேவையான எண்ணிக்கை தர வேண்டும் என்றும் கூறினார்.

**மூன்று படிவம்**

இந்த வருடம் புதிதாக மூன்று

படிவங்கள் வழங்கப்பட்டது.

1. மாணவர்களின் புள்ளி விவரப் படிவம்

2. புதிதாக மாணவர்களை சேர்க்கும் படிவம்

3. மாணவர்களின் பெயர், பிறந்த தேதி, வகுப்பு அடங்கிய படிவம்

இம்மூன்று படிவங்களும் நிரப்பி ஜூன் 30க்கு முன்னால் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்றும், வகுப்பு 10, 12 மற்றும் இந்த வருடம் முதல் 11 ம் வகுப்பு மாணவர்களுக்கும் மறுதேர்வு ஜூன் 17 ஞாயிற்றுக்கிழமை படந்தாலுமூட்டில் வைத்து நடைபெறும் என்றும் இயக்குநர் தந்தை கூறினார். திரு. மரியதாஸ் ஆசிரியரின் நன்றியுரையுடன் கூடுகையானது இனிதே முடிவடைந்தது.

## RE - EXAM

ம றை க் க ல் வி மாணவர்களுக்கான RE-EXAM ஜூன் 17 ஞாயிற்றுக்கிழமை அன்று படந்தாலுமூட்டில் வைத்து பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை நடைபெற்றது. 70 மாணவர்கள் தேர்வு எழுதினார்கள்.

## நன்றிகள்

2 வருடங்கள் மறைக்கல்வியின் இயக்குநராக பணியாற்றி விட்டு தற்போது திருநெல்வேலி மிஷனில் மறைத்தொண்டு பணி செய்வதற்காக சென்ற அருட்தந்தை அலக்ஸ் புத்தேட்டு அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றிகள். அவர் பணி சிறக்க வாழ்த்துக்கள்

## வாழ்த்துக்கள்

மறைக்கல்வியின் புதிய இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை சனில் பந்திசிறைக்கல் அவர்களுக்கும், உதவி இயக்குநராக பொறுப்பேற்ற அருட்தந்தை ஷோஜி புத்தன் புரைக்கல் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த வாழ்த்துக்கள். சிறப்பாக பணிபுரிய இறைவன் எல்லாவிதமான அருள் வரங்களை பொழியட்டும்

## நடைபெறும் நிகழ்வுகள்

மறைக்கல்வி ஆண்டுவிழா ஜூலை 8 ஞாயிற்றுக்கிழமை அன்று கல்லுவிளை ஆசீர் அரங்கத்தில் வைத்து நடைபெறும். காலை 9.30 மணிக்கு பெயர் பதிவும், 10 மணி முதல் 11.15 வரை வகுப்புகளும் தொடர்ந்து திருப்பலி மதிய உணவு, உணவுக்குப் பின் பொதுக்கூட்டமும் நடைபெறும். மறைக்கல்வி ஆசிரியர்கள் அனைவரும் மற்றும் மாணவர்கள் 10 பேரும் கலந்துக் கொள்ள அன்பாய் வேண்டுகிறேன்.

அருட்தந்தை சனில் பந்தி சிறைக்கல்
இயக்குநர்

சிறுமலர் MISSION LEAGUE 

# மிஷன்லீக் இயக்கம்

**பொறுப்பாளர்கள் கூட்டம்**

தக்கலை மறைமாவட்ட மிஷன் லீக் இயக்கத்தின் 2018 2019 ம் கல்வி ஆண்டின் முதல் பொறுப்பாளர்கள் கூட்டம் 16. 05.2018 அன்று மதியம் 2.00 மணியளவில் கல்லுவிளை மறைக்கல்வி நடுநிலையத்தில் இயக்குநர் தந்தை ஜாண் ஜோசப் அவர்கள் தலைமையில் ஜெபத்துடன் ஆரம்பமானது. இணை இயக்குநர் தந்தை அனைவரையும் வரவேற்க செயலர் அறிக்கை சமர்ப்பித்தார்கள். இயக்குநர் தந்தை அவர்கள் பேசும் போது, மிஷன் லீக் இயக்கம் எதற்காக உருவாக்கப்பட்டது? இவ்வியக்கத்தின் நோக்கம் என்ன? நமது செயல்பாடு என்ன என்பதை குறித்து நாம் தீர ஆராய்ந்து செயல்படும் போது ஏராளமான நன்மைகளை அடைய முடியும். மாணவர்களை ஈசோவுக்காக அவருக்குள் வளர்த்தெடுக்கும் ஒரு அமைப்பே மிஷன் லீக் இயக்கம். ஆன்மீக உணவை ஊட்டி, சேவையாகிய பிறரன்புப்பணியை நமது பணி வாயிலாக பிறருக்கு உணர்த்தும் ஓர் இயக்கம்,வீடு சந்திப்பு,ஜெபித்தல்,பிறருக்கு உதவ பிரிவு எடுத்தல் போன்ற செயல்பாடுகள் செய்தல் வேண்டும். மேலும் மறைமாவட்ட அளவில் கருத்தரங்கு, தியானங்கள் நடத்துதல், சிறுமலர் எல்லா இடங்களிலும் எல்லா பிள்ளைகளுக்கும் சென்று சேர பொறுப்பாளர்களாகிய நாம் உதவ வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள்.

**தீர்மானங்கள்**

***வட்டார அளவில் தியானம் மற்றும் கருத்தரங்கு நடத்துதல்**

| நாள் | மறைவட்டம் |
|---|---|
| ஆகஸ்ட் 12 | மஞ்சாலுமூடு, ஆறுகாணி |
| ஆகஸ்ட் 26 | சூசைபுரம், நித்திரவிளை |
| செப்டம்பர் 02 | தக்கலை, படந்தாலுமூடு |

***போட்டிகள் நடத்துதல் பரிசுவழங்குதல்**

***கட்டுரை மற்றும் வினாடி வினா இரு பிரிவாக விசுவாச**

**நடைப்பயணம் நடத்துதல்**

***2017-2018 ம் ஆண்டின் பொறுப்பாளர்களே இவ்வாண்டும்** வட்டார **அளவிலும் மறைமாவட்ட அளவிலும் செயல்படுதல்**

**அறிவுரைகள்**


- 2018-2019ஆம் ஆண்டின் தொடக்கவிழா மற்றும் பொறுப்பாளர் தேர்வு பங்கு வட்டார அளவில் நடத்துதல்.
- இறந்த முன்னாள் உறுப்பினர்களுக்காக **திருப்பலி** ஒப்புக் கொடுத்து ஜெபித்தல்
- கல்வியில் குறைபாடுடைய குழந்தைகளுக்காக, நண்பர்களுக்காக ஜெபித்தல்
- ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் விவிலியம் வாசித்து அதன் உட்கருத்தை மறையுரையாக 2 நிமிடம் சொல்லுதல் சீராக் 1,2,3,4,5,6,7,8.
- ஒவ்வொரு மாதமும் ஒரு குருவானவர் மற்றும் கன்னியருக்காக ஜெபித்தல்
- புனித தோமையார் மற்றும் புனித அல்போன்சம்மா விழா கொண்டாடுதல்
- பங்கு தந்தையோடு இணைந்து மிஷன் லீக் உறுப்பினர்கள் பிறருக்கு உதவி செய்தல்
- வீடுகள் சந்தித்து கிடைக்கும் சிறு காணிக்கையை மறைத் தளங்களுக்கு உதவுதல்
- நமது பங்கு மிஷன் லீக் இயக்க செயல்பாடுகளை பார்வையிட இயக்குநர் தந்தை அவர்கள் வருதல்,அறிக்கை அளித்தல்.
- உறுப்பினர் fund தலா ரூ.10 வீதம் கொடுத்தல், வீடு சந்திப்பு வாயிலாக ஜெபிக்கும் பழக்கம் உருவாக்குதல், பிள்ளைகள் வளர்ச்சி மறைமாவட்ட வளர்ச்சி என்பதை உணர்த்துதல்.

பல அறிவுரைகள் அவர்களின் இறுதி ஆசீருடன் தீர்மானங்களுக்குப் பின் கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. சகே.ஞானதாஸ் அவர்கள் இறுதியில் அனைவரும் இனிய அனைவருக்கும் நன்றிக்கூற தந்தை தேனீர் பருகி மகிழ்ந்தனர்.

அருட்தந்தை ஜா**ண் ஜோசப்**
இயக்குநர்



VINCENT-DE-PAUL
வின்செந்தியர்



# தக்கலை மத்திய சபை

**முழுக்கோடு ஆண்கள் கிளைச்சபை**

முழுக்கோடு புனித தோமையார் ஆண்கள் கிளைச்சபை சார்பில் 06 .05.2018 அன்று ரூபாய் 1000 வீதம் 24 மாணவர்களுக்கு கல்வி உதவி வழங்கப்பட்டது.

**பெண்கள் கிளைச்சபை**

முழுக்கோடு புனித தோமையார் பெண்கள் கிளைச்சபை சார்பில் 12.05.2018 அன்று திட்ட உதவி வழங்கப்பட்டது.ரூபாய் 10000 வீதம் 8 நபர்களுக்கு அருட்தந்தை செபஸ்டின் சிவிமி அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு வட்டாரச் சபைத் தலைவர் சகோ. தன்சிலாஸ் மற்றும் மத்திய சபை திட்ட கண்காணிப்பாளர் சகோ. ஷிபு மோன் அவர்களும் கலந்துக்கொண்டனர்.

சகோ. ஷாஜன்
செய்தி தொடர்பாளர்

## முழுக்கோடு ஆலய அர்சிப்பும் கர்தினால் சந்திப்பும்

பொன்விழாவை முன்னிட்டு புனரமைக்கப்பட்ட முழுக்கோடு புனித தோமையார் ஆலய அர்ச்சிப்பு ஜூலை 15 2018 அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். சீரோமலபார் திருச்சபையின் உயர் பேராயர் மார் ஜார்ஜ் கர்தினால் ஆலஞ்சேரி அவர்கள் கலந்து கொண்டு ஆசி வழங்க உள்ளார்.

உயர் பேராயர் அவர்கள் ஜூலை 14 மாலை மறைமாவட்டம் வருகை தர உள்ளார். அன்றைய தினம் மாலை 6 மணிக்கு சங்கமத்தில் பேராயரோடு அருட்தந்தையர்கள் கூடுகையும், விருந்தும் நடைபெற உள்ளது.

மறுநாளன்று மதியம் 2 மணிக்கு முழுக்கோடு கார்மல் பள்ளியில் வைத்து அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்பணிப்பேரவை உறுப்பினர்களுக்குமான கூட்டம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கிறோம்.

# தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

## DOCAT பயிற்சி பாசறை

வாழ்வை தந்து திறன்மிகு அறிவுடன் நம்மை படைத்த இறைவனின் பணிக்கென இளைஞர்களை உருவாக்கிடும் நல் முயற்சியின் முதல் படியாக DOCAT மூன்று நாள் பயிற்சி பாசறை 01.06.2018 வெள்ளிக்கிழமை முதல் 03.06.2018 ஞாயிற்றுக்கிழமை வரை தக்கலை சங்கமத்தில் வைத்து நடைபெற்றது.

பயிற்சி பாசறையின் நிகழ்வானது 01.06.2018 மாலை 6.00 மணிக்கு பெயர் பதிவுடன் ஆரம்பமானது. பின்னர் இளையோர் அனைவரும் சிறு விளையாட்டு மூலம் வேறுவேறு மறைவட்டம், பங்கு என்ற எல்லைகளை கடந்து தக்கலை இளையோர் என்ற ஒரே வட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டனர்.

## துவக்க விழா

துவக்க விழா 7.30 மணியளவில் இறைவணக்க பாடலுடன் ஆரம்பமானது. பின் செயலர் பபிஷா அனைவரையும் வரவேற்க, பயிற்சி பாசறையை நம் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் எழுச்சியூட்டும் துவக்க உரையாற்றி தொடங்கி வைத்தார். பின் தலைவர் ஜினோ அவர்கள் புனித ஜாண் மரிய வியானியின் வாழ்க்கையை மேற்கோள் காட்டி இளையோருக்கு உணர்ச்சி பூர்வமான தலைவர் உரை ஆற்றினார். பின்னர் துணைச் செயலர் ஜெசின் அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது.

## குழுக்கள்

பின் இரவு உணவிற்கு பின் இளையோர் இயக்க இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களால் DOCAT என்பதை பற்றிய சிறிய அறிமுக வகுப்பு ஒன்றும் இளையோரின் சோர்வை நீக்கி ஆர்வமூட்டி அடுத்த நாள் வகுப்புகளை உற்சாகத்தோடு கவனிக்க குறும்படங்கள் போடப்பட்டன. பின் இளையோர் இயக்க பொறுப்பாளர்களால் 5 குழுக்கள் பிரிக்கப்பட்டு குழு தலைவர் மற்றும் செயலர் மற்றும் குழுவிற்கான பெயர் தெரிவு செய்யப்பட்டது.

## திருப்பலி, பக்தி முயற்சிகள்

இளையோர்களை திறமையில் வளர்க்க முதல்படி அவர்களை ஆன்மீகத்தில் வளர செய்வது என்பதால் தினமும் காலை 6.30 மணிக்கு குழுவாரியாக காலை செப வழிபாடு நடத்துதல் மற்றும் 7.00 மணிக்கு திவ்விய திருப்பலியில் பங்கு கொள்ளுதல் மற்றும் 7.00 மணிக்கு நம் அன்னையின் பக்தி

ஜெபமாலை சொல்லுதல் போன்ற நிகழ்வுகளில் இளையோர்கள் ஆர்வமுடன் கலந்துக் கொண்டனர்.

**DOCAT செயல்முறை**

DOCAT புத்தகத்தின் பாடப்பி ரிவுகள் நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதன் சிறு குறிப்புகள் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டது. பின் அவை இறையியலில் ஆழமான கருத்துக்களை கற்றுத் தேர்ந்த அருட்தந்தையர்களால் வகுப்புகளாக எடுக்கப்பட்டது. அதன் பின் இளைஞர்கள் அந்த வகுப்புகளின் மூலம் என்ன கற்றுக் கொண்டார்கள் என்பதனை தெளிவு படுத்தும் அளவிற்கு சமீபகால நிகழ்வுகள் மூலம் குழுவாரியாக விவாதிக்கப்பட்டு அதன் நன்மை தீமையை அறிந்து திருச்சபை மற்றும் இந்திய சட்ட அமைப்பில் வரும் சந்தேகங்கள் நிகழ்வுகள் புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் பகுதிகள் வினாக்களாக எழுதப்பட்டு அருள்தந்தையர்களால் விளக்கம் அளிக்கப்படும்.

**முதல் அமர்வு**

முதல் வகுப்பானது அருட்தந்தை ஜஸ்டின் சுதீஷ் அவர்களால் “Unique And Infinitely Valuable” என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. இவை மக்களின் பார்வையில், திருச்சபையின் பார்வையில் என்று இருகோணங்களில் விளக்கப்பட்டது. இதன் பின் குழு விவாதத்திற்கு கருச்சிதைவு, கருணைக் கொலைகள் போன்றவை குறித்து விவாதித்து சந்தேகங்களுக்கு வினா எழுப்பி விடைகள் தெரிந்துக் கொண்டனர்.

**இரண்டாம் அமர்வு**

இரண்டாம் அமர்வு அருட்தந்தை அனலின் அவர்களால் படைப்பு என்னும் தலைப்பில் தொடக்க நூலை மேற்கோள் காட்டி நடத்தப்பட்டது. படைப்புகளிலே உன்னத படைப்பான மனித படைப்பானது இயற்கையோடு எப்படி ஒன்றித்து வாழ்ந்து அதை பாதுகாக்க வேண்டும் என்பதை இயற்கை வளம் ததும்ப நகைச்சுவை கலந்த நல் தமிழில் எடுத்துரைத்தார். பின் குழு விவாதத்தில் ஒரு தலைக் காதல், காதல் தோல்வி, சாதிய கொலைகளால் ஏற்படும் படைப்பின் மாண்பு குறைபாடு போன்ற விவாத கேள்விகளுக்கு பதில்கள் வழங்கப்பட்டன.

**மூன்றாம் அமர்வு**

மூன்றாம் அமர்வு அருட்தந்தை ஜோண் ஜோசப் அவர்களால் கத்தோலிக்க திருச்சபையின் நான்கு கொள்கைகள் என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. புரிதலுக்கு சிரமமான தலைப்பை எளிய தமிழில் தெளிவுற விளக்கினார்.

**நான்காம் அமர்வு**

நான்காம் அமர்வானது அருட்தந்தை டென்சி அவர்களால் சபையின் சமூக படிப்பினைகள் என்ற தலைப்பில் நடத்தப்பட்டது. தந்தை அவர்களால் DOCAT எப்படி ஆரம்பிக்கப்பட்டது என சபையின் தொடக்க வரலாறுகளை மேற்கோள் காட்டி எளிய முறையில்

விளக்கப்பட்டது.

**பாடல் மற்றும் விளையாட்டு**

இளையோர்கள் சோர்வடையாமல் இருக்கவும் கூர்மையான புத்தியுடன் கவனிக்கவும் செய்யும் பல செய்கை பாடல்கள், விளையாட்டுகள் என அருட்தந்தை பிரின்டோ அவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது. அவரின் சுறுசுறுப்பை இளையோர்கள் அனைவரும் பெற்று பிரதிபலித்தனர்.

**CAMP FIRE**

இளையோரின் ஆர்வத்தை தூண்டிய Camp Fire 02.06.2018 அன்று இரவு 9.30 மணியளவில் ஆரம்பமானது. ஒவ்வொரு குழுக்களும் தங்கள் விருது வாக்கு மற்றும் அடையாளச் சின்னத்தை வெளியிட்டனர். இளையோர் அனைவரும் ஆடல், பாடல், நடிப்பு என தங்கள் கற்பனை நயமிக்க, எழுச்சியூட்டும், காண்பதற்கு இனிய நிகழ்ச்சிகளை நடத்தி தங்கள் பயிற்சி பாசறையின் அனுபவத்தையும் பகிர்ந்துக் கொண்டனர்.

**அறிமுக விழா**

பயிற்சி பாசறையின் மூன்றாம் நாள் அன்று புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட மறைமாவட்ட பொறுப்பாளர்களை இயக்குநர் தந்தை அறிமுகப்படுத்தி வைத்தார். பின் பங்களவில் எப்படி DOCAT வகுப்புகளை தொடங்க வேண்டும் மற்றும் TCYM செயல்பாடுகள் எப்படி இருக்க வேண்டும் எனவும் அறிமுகப்படுத்தப்பட்டது. வரும் ஆண்டில் TCYM ன் செயல்பாடுகள் குறித்தும் அறிமுகப்படுத்தப்பட்டது. பின் DOCAT பங்களவில் தொடங்குவதில் ஏற்படும் தடைகளை குறித்தும் அதை தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

**நிறைவு விழா**

மூன்று நாள் பயிற்சி பாசறையின் நிறைவு விழாவானது 03.06.2018 அன்று மாலை 3.00 மணியளவில் இறைவணக்கத்தோடு ஆரம்பமானது. துணைச் செயலர் ஜெசின் அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக FCC மாகாண தலைவி Sr. ஷீலியா அவர்கள் கலந்துகொண்டு சமூகம் மற்றும் சபை இளைஞர்களிடம் எதிர்பார்ப்பது என்ன என்பது பற்றி உற்சாகமூட்டும் சிறப்புரை ஆற்றினார். பின் மூன்று நாள் பயிற்சி பாசறையின் கலாட்டாக்கள் காணொலி மூலம் காண்பிக்கப்பட்டது. பின் இயக்குநர் தந்தையின் கனவுகளையும் இளைஞர்களின் கடமைகளையும் குறித்து அருட்தந்தை ஜோண்ஸிலால் அவர்கள் எழுச்சியுரை ஆற்றினார். பின் நடந்த இளைஞர்களின் கலக்கல் நடனம் மற்றும் தலைவரின் உரை மற்றும் தொகுப்பாளர் துணைத்தலைவர் அபிமோள் அவர்களின் தொகுப்பு நிகழ்ச்சிக்கு மெருக்கேற்றியது. பின் செயலர் பபிஷா அவர்களால் நன்றியுரை வழங்கப்பட்டது.

**நன்றி**

இளையோர் DOCAT பயிற்சி பாசறைக்கு 65 இளையோர்கள்

வருகை தந்து தங்கள் பங்களிப்பை முழுவதும் அளித்தனர். இதற்கான முழு வேலைகளையும், முயற்சிகளையும் தளராமல் ஆற்றி வரும் எம் இளையோர் இயக்க தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்களுக்கும் பெற்றோர்கள் மற்றும் இளையோர் அனைவருக்கும் நன்றி. இளையோரை நற்செய்தியாளர் ஆக்கும் DOCAT முதல் படியான முதல் பயிற்சி பாசறையானது 03.06.2018 அன்று மாலை 4.30 மணி அளவில் இனிதே நிறைவடைந்தது.

**சுற்றுலா**

தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம் சார்பில் இளைஞர்களுக்கு DOCAT மூன்று நாள் பயிற்சி முகாம் நடைபெற்றது. அதை தொடர்ந்து பயிற்சி முகாமில் பங்கேற்ற இளைஞர்களுக்கு இரண்டு நாள் சுற்றுலா 8,9 நடைபெற்றது. 8 தேதி காலை 8 மணி அளவில் படந்தாலுமூடு திருஇதய ஆலய வளாகத்தில் இருந்து புறப்பட்டது. சுமார் 10 மணிக்கு சின்ன வேளாங்கண்ணி மாதா கோயிலில் சென்று அங்கு பார்வையிட்ட பின் காலை உணவை அங்கே சாப்பிட பின்பு அங்கிருந்து புறப்பட்டு சென்றோம். பின்பு மதியம் 1 மணிக்கு திருநெல்வேலி ஐந்தருவி சென்றடைந்தோம். ஐந்தருவியில் குளித்துவிட்ட பின் மதிய உணவை அங்கே முடித்த பிறகு அங்கிருந்து குற்றாலம் வந்தடைந்தோம். குற்றாலம் பார்வையிட்ட பிறகு தன்னூத்து மின்னல் மாதா கோயில் சென்று பார்வையிட்டு பிறகு 7:30 மணிக்கு செங்கோட்டை தக்கலை மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் புலரி பள்ளிக்கூடத்தில் சென்றடைந்தோம். பிறகு இரவு உணவு சாப்பிட்ட பிறகு எல்லோரும் சேர்ந்து ஆடல், பாடல், விளையாட்டு என்று இரவு நேரம் மகிழ்ச்சியுடன் செலவிட்டோம். 11 மணி அளவில் தூங்க சென்று விட்டோம். மறுநாள் காலை 7 மணிக்கு எழுந்து, 8 மணிக்கு திருப்பலியில் கலந்து கொண்டோம். திருப்பலி முடிந்த பிறகு காலை உணவு சாப்பிட்ட பின் 10 மணிக்கு அங்கிருந்து கிளம்பி பாலருவி சென்றோம். முதல் நாள் இரவு உணவு, தங்கும் வசதிகள், மறுநாள் காலை உணவு மற்றும் திருப்பலிக்கான வசதிகளை எல்லாம் செங்கோட்டை மிஷன் இயக்குனர் அருட்தந்தை. ஜான் பால் அவர்கள், அருட்தந்தை. செபி மற்றும் அங்குள்ள அருட்கன்னியர்கள் தயார் செய்து தந்தார்கள். பாலருவி பார்வை யிட்ட பிறகு அங்கிருந்து புறப்பட்டு தென்மலை சுற்றி பார்த்த பிறகு 3 மணிக்கு மதிய உணவு சாப்பிட்ட பின் அங்கிருந்து புறப்பட்டு சுமார் 7 மணி அளவில் படந்தாலுமூடு திருஇதய ஆலய வளாகத்தில் திருபி வந்து சேர்ந்தோம். இப்படி சுற்றுலா இனிதே முடிவடைந்தது. இந்த சுற்றுலாவில் 40 இளைஞர்கள் கலந்து கொண்டனர்.

**DOCAT தொடங்கப்பட்ட பங்கு தளம்**

DOCAT ஆனது 17.06.2018 அன்று பாலப்பள்ளம், படந்தாலுமூடு, சூசைப்புரம், காரோடு, மாங்கரை, முஞ்சிறை, கிள்ளியூர், தக்காளிவிளை ஆகிய பங்கு தளங்களில் தொடங்கப்பட்டன. சூசைப்புரம், மாங்கரை, கிள்ளியூர், தக்காளிவிளை ஆகிய பங்குகளில் மறைமாவட்ட தலைவர் ஜினோ மற்றும் மறைவட்ட துணைச்செயலர் அஜித் அவர்களால் பார்வை யிடப்பட்டது. 24.06.2018 அன்று ஆறுகாணி, வாறுதட்டு, வயலின்கரை, ஆகிய பங்கு தளங்களில் DOCAT ஆனது சிறந்த முறையில் தொடக்கமிட்டனர்.

## மஞ்சாலுமூடு மறைவட்டம்

**காரோடு**

24.06.2018 அன்று DO-CAT நடப்பதை மஞ்சாலுமூடு மறைவட்ட தலைவர் விஜில் பார்வை யிட்டார். புதிய பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 25.06. 2018 அன்று இளைஞர் இயக்க தலைவர் விபின் அவர்களின் திருமண நிகழ்ச்சி நடைபெற்றது. இளையோர்கள் நன்முறையில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

மஞ்சாலுமூடு

20.06.2018 அன்று பத்துக்காணி ஆலய மேம்பாட்டு பணிக்காக மஞ்சாலுமூடு மறைவட்டம் சார்பாக ரூ.3000 தலைவர் விஜில் அவர்களால் வழங்கப்பட்டது.

**மாலைக்கோடு**

24.06.2018 அன்று பங்குத்தந்தையோடு சேர்ந்து வருகின்ற துக்ரான தினத்தை முன்னிட்டு ஆலய சுற்றுப்புறத்தை அனைத்து இளையோர்கள் ஒன்றாக சுத்தம் செய்தனர்.

சூசைபுரம் மறைவட்டம்

24.06.2018 அன்று சூசைபுரம் மறைவட்ட பொறுப்பாளர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்ட மறைவட்ட அளவிலான கூடுகை நடைபெற்றது. கூட்டத்தை இயக்குநர் தந்தை ஜோசப் சந்தோஷ் மற்றும் மறைமாவட்ட துணைத்தலைவர் அபிமோள் பார்வையிட்டனர்.

**தீர்மானங்கள்**

DOCAT அனைத்து ஆலயங்களில் நடைபெற முயற்சி எடுத்தல், மாதத்திற்கு ஒருமுறை மறைவட்ட கூடுகை நடத்துதல், புனித அல்போன்சா நடைபயணம் பங்கு கொள்ளுதல், என தீர்மானிக்கப்பட்டது.

## நித்திரவிளை மறைவட்டம்

**வாறுதட்டு**

24.06.2018 அன்று இயற்கையை பாதுகாக்கும் நோக்குடன் மரம் வளர்க்கும் திட்டத்தை DO-CAT படிப்பினை மூலமாக தொடக்கமிட்டனர். மறைவட்ட தலைவர் ஜன லெட் அவர்கள் பார்வையிட்டார்.

பபிஷா|செயலர்

# கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

Kanyakumari Social Service Society

**உலக சுற்றுச் சூழல் தினம்**

வாழ்கையின் தரத்தையும், நல்வாழ்வையும் முன்னேற்ற வழியில் கொண்டு செல்வது வளர்ச்சி. அந்த வளர்ச்சியை கருத்தில் கெண்டு சுற்றுச் சூழலுக்கு முக்கியத்துவம் தராமல் இருப்பதால் தற்பொழுது சுற்றுச்சூழலின் தரம் அபாயகர மானதாகவும் பாதிப்புக்குள்ளாகி எதிர்பாராத எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றது. சுற்றுச்சூழலின் முக்கியத்துவத்தை உணர்த்தும் விதமாக ஜூன் 5ம் தேதி உலக சுற்றுச்சூழல் தினம் கன்னியாகுமரி சமூகசேவை சங்கம் மற்றும் சுயஉதவிக் குழுக்களின் சார்பில் நமது கிராமத்தை பசுமையாக்குவோம் என்ற சிந்தனையில் 32 இடங்களில் நடைபெற்றது. இதில் மரம் நடுதல், சுற்றுச்சூழல் பயிற்சி வகுப்புகள் மற்றும் கிராமத்தை தூய்மைப் படுத்துதல் போன்ற நிகழ்சிகள் நடைபெற்றது. இதில் அருட்தந்தையர்கள், ஊர்தலைவர்கள், குழு உறுப் பினர்கள் என ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

**குடும்பம் ஒன்றை காப்போம் திட்டம்**


“குடும்பம் ஒன்றை காப்போம்” திட்டத்தின் சார்பில் பயனாளிகளின் 8 முதல் 10 வகுப்புமாணவர்களின் இலக்கினை திர்மானிக்கும் கல்வி சிந்தனையில் என்ற விழிப்புணர்வு முகாம் கல்லுவிளை KKSSS அரங்கத்தில்; வைத்து ஜூன் 2தேதிகாலை 10 மணிமுதல் மதியம் 2 மணி வரை நடைபெற்றது. இதனை KKSSS துனை இயக்குநர் அருட்தந்தை வினுனு ஜோசப் தொடங்கி வைத்தார். இதில் சிறப்பு விருந்தினராக குடும்பம் ஒன்றை காப்போம் திட்டத்தின் ஒருங்கினைப்பாளர் திரு.விஜயா ராஜன் அவர்கள் கலந்து கொண்டு பேசும் போது உன் இலட்சியம் சரிவர அமைய உன் இலக்கு சரியாக அமைக்கவேண்டும். 10ம் வகுப்பின் படத்திட்டத்திலே முடிவு செய்ய வேண்டும், நான் என்ன வேலையில் அமர வேண்டும் இலக்கை நிர்ணயிப்பது மட்டும் மல்ல, அதற்கு உழைப்பை முதலீடாக பயன் படுத்த வேண்டும் எனவும் கூறினார். இந்நிகழ்வில் களப்பணியாளர்கள் திருமதி சரோஜம் உட்பட 87 மாணவர்கள் கலந்துகொண்டனர். தங்களுடைய கல்வி முறைக்கும் இலக்கினை தீர்மானிக்கஉதவியாக இந்த முகாம் அமைந்ததாக மாணவர்கள் தெரிவித்தனர்.

அருட்தந்தை சஜி எலம்பாசேரில்
இயக்குநர்

# FEASTDAY & BIRTHDAYS OF REV FATHERS

| FEASTDAYS - JULY | |
|---|---|
| 03 | Rev. Fr. Robins Kuzhikodil |
| 03 | Rev. Fr. Thomas Powathuparampil |
| 03 | Rev. Fr. Jiji Koipuram |
| 03 | Rev. Fr. Tinu Kottackaparampil CMI |
| 03 | Rev. Fr. Thomas Sathiyanesan |
| 03 | Rev. Fr. Ajeesh Attiyil |
| 03 | Rev. Fr. Abin Poovathummoottil |
| 03 | Rev. Fr. Thomas Jebanesh |
| 15 | Rev. Fr. Kurian Kunnumpuram MST |
| 15 | Rev. Fr. Linslal Mangalath |
| 25 | Rev. Fr. Shojo Erupathanchilchira |
| 25 | Rev. Fr. Toji Parampilparampil |
| 25 | Rev. Fr. Chacko Basil CMI |
| 25 | Rev. Fr. Jacob Aiyammatra |
| 25 | Rev. Fr. Chacko Akkathara |
| 25 | Rev. Fr. Vinod Kanakalil |
| **BIRTHDAYS - JULY** | |
| 07 | Rev. Fr. Mathew Mulangasserry |
| 07 | Rev. Fr. Thomas Jebanesh |
| 16 | Rev. Fr. George Panamthottam CMI |
| 21 | Fr. Kurian Mathew Koipuram |

# அருட்சகோதரர்களிடமிருந்து...




பாரத மண்ணின்பாதுகாவலராக அறியப்படும் புனித தோமையார் தினவிழா வாழ்த்துக்களை அனைத்து அருட்சகோதரர்கள் பெயரில் உங்கள் அனைவர்க்கும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

**திருத்தொண்டர் அருட்பொழிவு**

அருட்சகோதரர் அபிலாஷ் தனது இறையியல் கல்வியை ரோமில் நிறைவு செய்து ஜூன் 30 அன்று மறைமாவட்டம் வந்தடைந்தார். அவரின் திருத்தொண்டர் அருட்பொழிவு ஜூலை 3 அன்று கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் மாலை 5 மணிக்கு நடைபெறும். தொடர்ந்து திருத்தொண்டர் கல்வியை வடவாதூர் குருத்துவக்கல்லூரியில் பயில உள்ளார்.

**கல்வியாண்டு**

புதிய கல்வியாண்டில் அருட்சகோதரர்கள் அனைவரும் தங்களை அதிக ஆர்வத்துடன் அனைத்து நிகழ்வுகளிலும் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்கின்றார்கள். சென்னை புனித டாண் போஸ்கோ செமினரியில் இறையியல் முதல் வருட படிப்பு பயின்று வரும் அருட்சகோதரர் மகேஷ் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் தூய சவேரியார் ஆலயம் பிராட்வே என்ற இடத்தில் திருத்தொண்டு பணி செய்து வருகிறார். மற்ற அனைத்து அருட்சகோதரர்களுக்கும் வகுப்புகள் ஆரம்பமாகி சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

**களப்பணி**

களப்பணிக்காக வெவ்வேறு பங்குகள் மற்றும் நிறுவனங்களில் சென்றிருக்கும் அருட்சகோதரர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புக்களை பொறுமையுடன் சரிவர செய்து வருகிறார்கள்.

**புதிய அருட்சகோதரர்கள்**

இந்த வருடம் புதிதாக 9 அருட்சகோதரர்கள் இறையழைத்தலை ஏற்றுக் கொண்டு இறைப்பணி செய்வதற்காக தக்கலை மறைமாவட்ட இளங்குரு மடத்தில் சேர்ந்துள்ளனர்.

அருட்சகோதரர் றோபின்
தலைவர்

# மறைவட்ட செய்திகள்




## நித்திரவிளை மறைவட்டம்

### புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறை

முன்சிறை அன்பகம் கன்னியர் இல்லத்தில் சுமார் 13 ஆண்டுகள் சிறப்புற பணியாற்றி கிறிஸ்துவுக்காகத் தன்னை முற்றிலும் அர்ப்பணமாக்கிய அருட்சகோதரி ஜெசிந்தா அவர்கள் மே மாதம் 27 ம் தேதி இறையடி சேர்ந்தார்கள். அவர்களின் நினைவுத் திருப்பலி 22.06.2018 அன்று மாலை 6.00 மணிக்கு புனித ஜார்ஜியார் திருத்தலம் முஞ்சிறையில் நடைபெற்றது. தொடர்ந்து கிறிஸ்தவர்களுக்கான சிறப்பு ஜெப வழிபாடும் ஆராதனையும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றது. அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் வழிநடத்தினார்கள். பங்கு மக்கள் அனைவரும் கலந்து கொண்டு அருட்சகோதரி அவர்களுக்காக ஜெபித்து அவர்கள் ஆன்மா சாந்தியடைய மன்றாடினார்.

### புனித அந்தோணியார் ஆலயம் வயலின்கரை

கோடி அற்புதர் புனித அந்தோணியார் திருவிழாவும், பங்கு குடும்ப விழாவும்,பங்கு காவலர் விழாவும் என வயலின்கரை புனித அந்தோணியார் ஆலயத்தில் 10.06.2018 முதல் 17.06.2018 முடிய நடைபெற்றது. தக்கலை மறைமாவட்ட குருகுல முதல்வரும் பங்குதந்தையுமான பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் 10.06.2018 அன்று திருக்கொடி ஏற்றி திருப்பலி திருவிழாவினை தொடங்கி வைத்தார்கள். பேரருட்தந்தை சனல் பந்திச்சிறைக்கல் அவர்கள் மறையுரையாற்றினார்.

2,3,4ம் திருவிழா நாட்களில் சகோ.ஆனந்த் (இயேசு நம் மீட்பர் சென்னை) அவர்கள் தலைமையில் நற்செய்திப் பெருவிழா நடைபெற்றது. 5ம் நாள் அருட்தந்தை அனில்ராஜ் அவர்கள் தலைமையில் திருப்பலியும் ஆடம்பர நற்கருணை ஆராதனையும், பவனியும் நடைபெற்றது. 6ம் நாள் திருப்பலி மற்றும் பக்த இயக்கங்களின் ஆண்டுவிழாவும். 7ம் நாள் பேரருட்தந்தை றோபின்ஸ் மற்றும் பேரருட்தந்தை டென்சி முண்டுநடக்கல் அவர்கள் தலைமையில் ஆடம்பர திருப்பலியும், திருமுழுக்கு மற்றும் உறதிபூசுதல் நிகழ்வுகளும் நடைபெற்றன. இரவு 7.00 மணிக்கு ஆடம்பர தேர்பவனி நடைபெற்றது. 8ம் நாள் சீறோ

மலபார் வழிபாட்டின் சிறப்பு வழிபாடான இராசா வழிபாடும் **திருப்பலியும் பேரருட்தந்தை தோமஸ் சத்தியநேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு திருக்கொடி இறக்கி விழா நிறைவடைந்தது. 18 ம் தேதி காலை 7.00 மணிக்கு இறந்தவர்களுக்கான சிறப்புத் திருப்பலி நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் திருப்பலி மற்றும் புனித அந்தோணியார் நவநாளும் நடைபெற்றது.**

## சூசைபுரம் மறைவட்டம்

### புனித அந்தோணியார் திருவிழா

சூசைபுரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் ஜூன் 10 அன்று திருப்பலியில் பங்குத்தந்தை பெயர் கொண்ட திருநாள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஜூன் 1 புதிய கல்வி ஆண்டிற்கான திருப்பலி மாணவர்களுக்கு நடைபெற்றது.

### இரவு விழிப்பு ஜெபம்

ஜூன் 15 அன்று வெள்ளிக்கிழமை மாலை 9 மணி முதல் திருப்பலியுடன் ஆரம்பமானது. சகோதரர்கள் ஜெபின் மற்றும் பிரான்சிஸ் தலைமையில் 3 மணி நேரம் சிறப்பு ஆராதனையுடன் நடைபெற்றது. ஜூன் 16 காலை 5 மணிக்கு திருப்பலியுடன் இரவு விழிப்பு ஜெபம் முடிவடைந்தது. பங்குதந்தை ஆன்றணி ஜோஸ் அவர்களின் வழிநடத்துதலுடன் மிகவும் சிறப்பாக நடைப்பெற்றது. 70 க்கும் மேற்பட்ட இறைமக்கள் கலந்துக் கொண்டனர்.

### மாங்கரை_

மாங்கரை புனித வியாகப்பர் ஆலயத்தில் 17.06.2018 அன்று பாலூர் உறவிய ஆண்டு விழா அருட்தந்தை பிரின்ஸ் மாலியில் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைப்பெற்றது. 24.06.2018 அன்று மாதர்ஜோதிஸ் சிறப்புக் கூட்டத்தில் ஜெபமாலையும், வகுப்பும் நடைபெற்றது. 30 தாய்மார்கள் கலந்துக் கொண்டார்கள்.

### குடும்ப சங்கம்

பாலபள்ளம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் 7 மற்றும் 8 வது உறவியங்கள் வாயிலாக ஜூன் 17 மற்றும் 24 ஆகிய ஞாயிற்றுக்கிழமைகளில் குடும்ப சங்கம் நடைபெற்றது. பங்குதந்தை பிரிண்டோ அவர்கள் அனைத்து வீடுகளையும் சந்தித்து ஜெபம் செய்தார்.

### மறைக்கல்வி புதுப்பித்தல்

10.06.2018 அன்று ஆசிரியர்கள் இணைந்து திருப்பலியில் மெழுகுதிரி ஏந்தி உறுதிமொழி கூறி மறைக்கல்விப் பணியை புதிப்பித்துக் கொண்டனர்.

### கிள்ளியூர் ஆலயம் புதுப்பித்தல்

கிள்ளியூர் புனித தேவ மாதா ஆலயப் புதிப்பித்தல் பணி நடைப்பெற்றுக் கொண்டிருக்கிறது.

**கம்பெனி**

தேவமாதா ஆலயத்தில் புதியதாக கட்டப்படும் தையல் மையம் தற்போது முடியும் தருவாயில் உள்ளது.

**மஞ்சாலுமூடு மறைவட்டம்**

**முழுக்கோடு ஜூபிலி விழா**

முழுக்கோடு புனித தோமையார் ஆலயம் தனது 50 வது பிறந்த ஆண்டை கொண்டாடுவதை முன்னிட்டு மாபெரும் ஜூபிலி விழாவாக கொண்டாட தீர்மானித்துள்ளோம். அதை முன்னிட்டு 15.07.2018 அன்று ஜூபிலி விழாவாகவும், 16.07.2018 முதல் 23.07 .2018 வரை குடும்ப விழாக்களாகவும் கொண்டாடப்படவுள்ளது. இறைமக்களாகிய தாங்கள் அனைவரும் ஜூபிலி விழாவிலும், குடும்ப விழாக்களிலும் சபை பாகுபாடு இன்றி கலந்து கொண்டு புனித தோமையாரின் பரிந்துரையால் அருள்வரங்களையும், இறை ஆசீர்வாதங்களையும் நிறைவாக பெற்றுச் செல்ல அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல் சேகரிப்பு : திருமதி செலின் மேரி| திருமதி ஸ்னேகலதா| திருமதி ஹேமா

## அல்போன்சா திருத்தலத் திருவிழா

அல்போன்சா திருத்தலத் திருவிழா ஜூலை 20 அன்று தொடங்கி ஜூலை 29 அன்று நிறைவு பெற உள்ளது. அதன் முக்கிய நிகழ்வுகள்

ஜூலை 20: திருக்கொடியேற்றுதல், திருப்பலி பேரருட்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம், குருகுல முதல்வர், தக்கலை மறைமாவட்டம்

ஜூலை 21: இளைஞர்களின் திருத்தலம் நோக்கிய நடைபயணம்

ஜூலை 25: மலங்கரை வழிபாட்டுமுறை திருப்பலி பேரருட்தந்தை வர்கீஸ், குருகுல முதல்வர், மார்த்தாண்டம் மறைமாவட்டம்

ஜூலை 28: இலத்தீன் வழிபாட்டுமுறை திருப்பலி மேதகு ஆயர் சிங்கராயன், சேலம் மறைமாவட்டம்

ஜூலை 29: மறைமாவட்ட திருத்தலத் திருவிழா கொண்டாட்டம் மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன், தக்கலை மறைமாவட்டம்.

**மறைவட்டங்கள்**

ஜூலை 20 - நித்திரவிளை, 21 - படந்தாலுமூடு, 23 ஆறுகாணி, 24 - சூசைபுரம், 26 - மஞ்சாலுமூடு, 27 - தக்கலை-பிலாங்காலை ஆகிய மறைவட்டங்கள் திருப்பலியை சிறப்பிக்கின்றன.

**போட்டிகள்**

தூய அல்போன்சா அகாடமி நடத்தும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கிடையேயான போட்டிகள் ஆகஸ்டு 4 அன்று நடைபெற உள்ளது.

# செங்கோட்டைச் செய்திகள்

**மாதாந்திர தியானம்**

09.06.2018 அன்று ஒருநாள் தியானமானது வாஞ்சி ஆலயத்தில் வைத்து நடைப்பெற்றது. காலை 9.30 மணியளவில் ஜெபமாலையுடன் ஆரம்பமானது சகோதரர் சிஜீ அவர்கள் தியான உரையாற்றினார். தொடர்ந்து ஆராதனை மற்றும் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஏராளமானோர் இத்தியானத்தில் பங்கெடுத்து இறையாசீர் பெற்றுச் சென்றனர்.

**தையல் மையம் திறப்பு விழா**

புளியரை செயலற்று கிடந்த புலரி அச்சகம் புதிப்பிக்கப்பட்டு தையல் நடத்துவதற்காக கொடுக்கப்பட்டது. அதன் திறப்பு விழாவானது 17.06.2018 அன்று நடைப்பெற்றது. காலை 10.30 மணியளவில் அருட்தந்தை றோபின் அவர்கள் அதனை திறந்து வைத்து அக்கட்டிடத்தை அர்ச்சித்தார்.

**மாதக் கூடுகை**

செங்கோட்டை மறைபரப்பு தளத்தில் பணியாற்றும் அருட்பணியாளர்களின் கூடுகையானது ஜூன் 24 அன்று பொரேத்தியன் கன்னியர் இல்லத்தில் வைத்து நடைப்பெற்றது. ஆராதனையுடன் தொடங்கிய இக்கூட்டத்தில் அருட்தந்தை ஜிப்ஸன் எம்.சி.பி.எஸ் அவர்கள் தியான உரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து ஒப்புரவு அருட்சாதனவும் வழங்கப்பட்டது. கூடுகையின் போது பிறந்தநாள் கொண்டாடிய அருட்தந்தையர்களுக்கும், அருட்கன்னியர்களுக்கும் வாழ்த்துக்கள் பரிமாறப்பட்டன. புதியதாக செங்கோட்டை மறைபரப்பு தளத்தில் பணியாற்ற வந்த அருட்தந்தை ஜின்ஸ் எம்.சி.பி.எஸ் அருட்தந்தை ஷினோய் எம்.சி.பி.எஸ் அவர்களுக்கும் அருட்சகோதரி சிபி டி,எச்.எஸ், பிரான்சி டி.எச்.எஸ் அவர்களுக்கும் வரவேற்பு வழங்கப்பட்டது. பின்பு பக்த இயக்கங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. இறுதியில் அன்பு விருந்துடன் கூடுகையானது நிறைவுபெற்றது.

அருட்தந்தை ஜாண்பால்
ஒருங்கிணைப்பாளர்

**முதலாண்டு நிறைவில்...**

அருட்தந்தை ஷிஜோ ஜோஸ் அவர்கள் உரோமை உர்பேனியம் பல்கலைகழகத்தில் தனது முதுநிலைக்கல்வியில் ஓராண்டை நிறைவு செய்துள்ளார். அருட்தந்தை பிரின்டோ அவர்களும் சட்டப்படிப்பில் தனது திருத்தொண்டுப் பணிகளுக்கிடையில் முதலாண்டை நிறைவு செய்துள்ளார். அதைப்போன்று அருட்தந்தை அபின் அவர்கள் சென்னை லயோலா கல்லூரியில் முதுநிலை சமூகப்பணியியலில் முதலாண்டை நிறைவு செய்துள்ளார்.

## BISHOP'S ENGAGEMENTS JULY 2018

| DATE | DAY | EVENTS |
|---|---|---|
| 1 | Sun | USA-Philadelphia>>Doha |
| 2 | Mon | Doha>> Trivandrum |
| 3 | Tue | Trivandrum>>Thuckalay\| Diaconate ordination of Bro. Abilash |
| 4 | Wed | Meeting with Fr. Robin Koorumullil\| Curia Meeting |
| 5-6 | Thu | Bishop's house |
| 7 | Sat | Athencode: Festal Holy Qurbana\|<br>Manjalamoodu: Blessing of Stage>> Minor Seminary |
| 8 | Sun | Festal Mass at Palukal \|Kalluvilai: Sunday School Ann. |
| | | Appatuvilai: Silver Jubilee of Wedding of Mr. Antony |
| 9 | Mon | Visit to Thirunelveli and Madurai Missions |
| 10 | Tue | Priest Conference |
| 11 | Wed | Financial committee meeting at Bishop's house |
| 12,13 | Thu | Mukkootukal: Class in Minor Seminary |
| 14 | Sat | Mukkootukal: Class in Minor Seminary |
| | | Sangamam: Welcome to Maj Arch. and Priests Meeting |
| 15 | Sun | Muzhucode: Blessing of church >> TNBC at Poondy |
| 16,17 | Mon | TNBC - Poondy |
| 18-19 | Wed | Visit of Mr. Nicemon and family |
| 20 | Fri | Nagercoil: Alphonsa Feast begins |
| 21 | Sat | Nadaipayanam to St. Alphonsa shrine at Nagercoil |
| 22 | | Muzhucode: Raza Qurbana\| Bishop's House: Guests |
| 23 | Mon | Bishop's House: Guests from Ireland |
| 24 | Tue | Visit to Shenkottai Mission |
| 25 | Wed | Curia meeting |
| 26 | Thu | Muzhucode: Blessing of Auditorium and Silver Jubilee of CMC convent |
| 27 | Fri | Bishop's House |
| 28 | Sat | Trivandrum: Marriage of Mr. Mathewkutti's son |
| 29 | Sun | Holy Mass at St. Alphonsa shrine, Nagercoil |
| 30-31 | Mon | Bishop's House |



Minor Seminary, Academic Year
Inauguration - 28.06.2018



TCYM - DOCAT



TCYM - DOCAT



TCYM - DOCAT Camp, 1-3.06.2018



TCYM- Exposure Program to Youth, 8-9.06.2018

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570